வலை: 40.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 125 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 10 சனிக்கிழமை (23.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# கொலைகார ஜனாதிபதியை வீட்டுக்கு விரட்டும் வரை மக்கள் ஓயக்கூடாது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

கொலைகார ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வீட்டுக்கு விரட்டும் வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

### அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

# சுகாதாரக் கட்டமைப்பு ஸ்தம்பிக்கும் அபாயம்

## ஆபத்தை நோக்கி நாட்டின் நிலைமை



(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு ஸ்தம்பிக்கும் அபாயம் நிலவுகின்றது.

நாட்டில் சுமார் 70 அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின் 15

## எரிவாயு விலை அதிகரிக்கப்படாது

### லிட்ரோவின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அரசாங்கத்தினால் 15

## துப்பாக்கி பிரயோகத்துக்கு அறிவுறுத்தவில்லை

### ரம்புக்கனை விவகாரம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள தான் அறிவுறுத்தல் வழங்கவில்லையென பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை 15

## மகிந்த உள்ளிட்ட அமைச்சரவை உடன் பதவி விலகவேண்டும்

### ஜனாதிபதிக்கு டலஸ் கடிதம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ச உட்பட தற்போதைய அமைச்சரவையில் உள்ள அனைவரும் உடனடியாக பதவி விலகவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் முன்னாள் அமைச்சர் டலஸ் 15

## கொடிகாமத்தில் ரயில் - பட்டா விபத்து சிறுவன் பலி; தந்தை, சகோதரன் படுகாயம்

### ரயில் பாதையை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்





(சாவகச்சேரி).

கொடிகாமம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற புகையிரதம் - பட்டா ரக வாகன விபத்தில் சிறுவன் உயிரிழந்துள்ள நிலையில் அவனது சகோதரனும் தந்தையும் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த தயாபரன் ஜனுசன் (வயது-12) என்ற 15

### சர்வதேச நாணய நிதியத்திடம்

## இலங்கை கோரிய அவசர நிதி உதவி நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம், கோரிய அவசர நிதியுதவியை சர்வதேச நாணய நிதியம் நிராகரித்துள்ளது என பாராளுமன்ற அமர்வின் போது 15

### அரசின் ஆணை

## இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது

### அனுரகுமார

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் ஆணை இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர 15

## கொழும்பு காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்யுமாறுகோரி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகைதரும் மக்கள் காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரு 15

## இலங்கையின் பொருளாதாரத்துக்கு சீனா தொடர்ந்து உதவும்

### பிரதமர் மகிந்தவிடம் சீனப் பிரதமர் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தொடர்ந்தும் சீனா தமது உதவிகளை வழங் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த இளைஞன்

## கழுத்தில் வெட்டுக்காயத்துடன் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவர் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியைச் சேர்ந்த இளைஞனே கழுத்தில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனுக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிடியாணை உத்தரவை நிறைவேற்றும் முகமாக யாழ்ப்பாண பொலிஸாரினால் இளைஞன் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த இளைஞன் தனது உடைமையில் இருந்த பிளேட்டினை எடுத்து, தனது கழுத்தை அறுத்துக்கொண்டுள்ளார் எனக் கூறி பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-33,104)

# சமிந்த கொலைக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சமிந்த லக்சானின் மரணம் ஒரு கொலை எனவும், மேலும் அது ஒரு குற்றவியல் சார்ந்த குற்றம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தமது வீட்டுத் தேவைக்காக எண்ணெய் பெற்றுக்கொள்ள வந்த சமிந்தவை கொடூரமாகக் கொலை செய்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசின் அடக்குமுறை சார்ந்த நடவடிக்கைகளால் ரம்புக்கனையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகிப் பலியாகிய இரு பிள்ளைகளின் தந்தையாரான கரந்தகஸ்தென்ன - நாரம்பந்த பிரதேசத்தில் வசித்து வந்த சமிந்த லக்சானின் வீட்டுக்கு நேற்று சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

தனது கணவரின் மரணத்தால் துயரடைந்துள்ள சமிந்த லக்சானின் மனைவி மற்றும் அவருடைய இரு பிள்ளைகளுடன் தனது துயரத்தைப் பகிர்ந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், இந்தக் கொலைச் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவர சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

குடும்பத்தின் அத்தியாவசிய எதிர்காலச் செயற்பாடுகளுக்காக நிதி உதவி வழங்கிவைத்த எதிர்க்கட்சித் தலைவர், தேவைப்படும் எந்நேரத்திலும் ஐக்கிய மக்கள் சக்தியாகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர்களுக்காக முன்நிற்பதாகவும் இதன்போது உறுதியளித்தார். (ம)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு நிதியுதவி

(கொழும்பு)

நாட்டுக்கு தற்போது தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி, 21.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளதாக நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

விற்பனைக்கு

முட்டை இடும் ஊர்ப் பேட்டுக் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

(11109)

077 720 5711

இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

A.R.K MOBILE SHOP
No.62, Hospital Road,
Jaffna.
T.P : 071 423 3121

(11134)



கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியர்
**இராஜராஜேஸ்வரன்** குருக்கள் அவர்களின்
பாசமிகு மாமியார்

**சரோஜா சற்குணசர்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்**

(C-4216)



31 ஆம் நாள்

நினைவஞ்சலி



அமரர்

கந்தையா பாலசுப்பிரமணியம்

( பிரதம லிகிதர் - இலங்கை போக்குவரத்து சபை )

பிறப்பு 13.03.1939 — இறப்பு 24.03.2022

கடந்த 24.03.2022 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.04.2022) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து நிகழும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பங்களா லேன்,
மல்லாகம்.

குடும்பத்தினர்



குருவே துணை

வாழ்க வையகம் — வாழ்க வளமுடன்



**மனவளக்கலை யோகப் பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம்
**அறிவுத்திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி...!**

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்று பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி
அறுபத்தைந்தாம் கலையாகிய 'மனவளக்கலையை'

**இந்த ஆண்டு முழுவதும்**
**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்**

- முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்ப்பம்
- அடுத்துவரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்

**அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள்**
**பெருமனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற**
**மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்.**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- உடல்நலத்திற்கு → எளிய முறை உடற்பயிற்சி
- உயிர்வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியான பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்:- 23.04.2022 (சனிக்கிழமை)
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
பயிற்சியை வழங்குபவர்:-
துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்,
துணைப் பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும்
அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,
அருள்நிதி க.ஜெயராணி

*வருக வருக! நலம் பெருக! பெறுக!*
வாழ்க வையகம் ; வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

(11133)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆவது நாளாக தொடரும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு - காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டம் நேற்று 14 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று நேற்று முன்தினத்துடன் மூன்றாண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் விசேட நினைவு கூரல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கொழும்பில் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பௌத்த மத குருமார்கள் பேரணியாகச் சென்று காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இஸ்லாமிய மதப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது அருட்தந்தையர்களால் அங்கிருந்தவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மேலும் நீர்



கொழும்பு - கட்டுவாப்பிட்டி தேவாலயத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை சிலுவையைச் சுமந்தபடி கொழும்பு நோக்கி பயணித்த நடிகர் ஜெகான் அப்புஹாமியும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்துடன் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக புத்தளத்தில் திரண்ட மக்கள்



(கொழும்பு)

கொழும்பு - காலி முகத்திடலில் இடம்பெற்று வருகின்ற அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து புத்தளத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகவும் குறித்த அரசாங்கம் பதவிவிலகும் வரை கோத்தா கோ கம என கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று புத்தளத்திலும் கூடாரங்களை அமைத்து மக்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (நி-6)

## 20 சதவீதத்தை தாண்டியது இலங்கையின் பணவீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இந்த மாதத்தில் பணவீக்கம் 21.5 சத வீதமாக அதிகரித்துள்ளதாக புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சர்வதேச பணவீக்க சுட்டெண்ணுக்கு அமைய இலங்கையின் பண வீக்கம் 20 சத வீதத்தை தாண்டி இருப்பது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையின் பணவீக்கமானது 18.7 சத வீதமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ‘சிங்கள மக்கள் மீதும் துப்பாக்கிகள் திரும்பும்’

# பிரபாகரனின் தீர்க்கதரிசனம் இன்று நிதர்சனமாகிவிட்டது

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



(கொழும்பு)

எங்கள் மீது நீட்டப்படும் துப்பாக்கிகள் என்றோ ஒருநாள் சிங்கள மக்கள் மீதும் திரும்பும் என்று அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

அவரது வார்த்தைகள் இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நாடு இப்போது கொதி நிலையில் உள்ளது. நீதியான தலைமைத்துவத்தில் இந்த நாடு இல்லை. நாட்டில் நடந்த இனப்படுகொலைகளுக்கு எந்தவொரு தலைவரும் வருத்தம் தெரிவித்ததாக வரலாறுகள் இல்லை.

யுத்தத்திற்குப் பின்னர் ராஜபக்ஷவினர்களுக்கு எதிராக பொது வேட்பாளராக களமிறங்கிய சரத் பொன்சேகாவுக்கு தமிழர்கள் வாக்களித்தனர்.

அதேபோன்று 2015 இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். 2019 இலும் தமிழர்கள் கோட்டாபயவுக்கு எதிராகவே வாக்களித்தனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் இந்த மண்ணில் ஆட்சி செய்ய வல்லமையற்றவர்கள் என்பதனாலேயே எதிர்த்து வாக்களித்தனர்.

அதனால் வீதிகளில் போராடும் சிங்கள சகோதர, சகோதரிகளிடம் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், நாங்கள் இவற்றை முன்னரே செய்தவர்கள்.

நாங்கள் போராடும் போது நீங்கள் மௌனம் காக்க வைக்கப்பட்டீர்கள். 2009 இல் இதே மாதத்தில் பாற்சோறு கொடுத்து சிங்கள மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். இன்று அவர்கள் அதனை புரிந்து கொள்ளும் காலம் வந்துள்ளது.

நாங்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். நாங்கள் வந்தேறியக் குடிகள் அல்ல. விஜயன் வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்துள்ளோம்.

வடக்குக் கிழக்கு எங்களின் தாயக மண் என்று எப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள். ராஜபக்ஷவினர் வெளியேறிய பின்னர் தமிழருடைய தேசம் தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன? நாங்களும் நீங்களும் நாட்டின் தேசியப் பிரஜைகள் என்று எப்போது உருவாகும்.

இதே காலிமுகத்திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் அறவழிப் போராட்டத்தை தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்த போது சிங்கள காடையர்களினால் தாக்கப்பட்ட வரலாற்றை சிந்தித்துப் பாருங்கள்.

பல இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். நான் சிங்கள மக்களுக்கு எதிரானவனும் அல்ல.

அவர்களை எதிரியாக பார்ப்பவனும் அல்ல. அவர்களின் வரலாறு, பண்பாடு, கலாசாரத்தை மதிக்கின்றவன். ஆனால் எங்கள் மீது நீட்டப்படும் துப்பாக்கிகள், செய்யும் கொலைகள் என்றோ ஒருநாள் சிங்கள மக்கள் மீதும் திரும்பும்.

அப்போது சிங்கள மக்கள் புரிந்துகொள்வார்கள். அன்றைய பிரபாகரனின் தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இலங்கையில் தெளிவாக நடைமுறையில் இன்று இருக்கின்றன எனத் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பரபரப்பான நிமிடத்தில்

# மும்பையை தட்டி தூக்கியது சென்னை சூப்பர் கிங்ஸ்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 33ஆவது லீக் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 3 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, திலக் வர்மா ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், முக்கேஷ் சௌத்ரி 3 விக்கெட்டுகளையும் பிராவோ 2 விக்கெட்டுகளையும் மிட்செல் சான்ட்னர் மற்றும் மகேஷ் தீக்ஷன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 156 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 3 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அம்பத்தி ராயுடு 40 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில், டேனியல் சேம்ஸ் 4 விக்கெட்டுகளையும் ஜெய்தேவ் உனட்கட் 2 விக்கெட்டுகளையும் ரிலே மெரிடித் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பில், 3 விக்கெட்டுகளை வீழ்த்திய முக்கேஷ் சௌத்ரி தெரிவு செய்யப்பட்டார். (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2568

### தயாழினி

நம்பிக்கைக்கு இதை விட சிறந்த உதாரணம் இருக்காது என்று நினைக்கிறேன்



நம்பிக்கைதான் வாழ்க்கை...

### பவி




### வானுசா

வாழ்க்கையில் சந்தோஷம் வேண்டுமென்றால் உன்னை நேசி!!!

சந்தோஷமே வாழ்க்கையாக வேண்டும் என்றால் உன்னை நேசிப்பவரை உண்மையாக நேசி!!!

### சிந்து


மனைவி: ஏங்க கோழிக்குழம்பை வாசம் இல்லாம வைக்கச் சொல்றீங்க...



கணவன்: அடியே பக்கத்து வீட்டுக்காரன் கோழியத் தேடிட்டு இருக்கான்டி...

### லக்ஷன்

காதல் வந்தால் சொல்லி அனுப்பு...



பெற்றோல் இருந்தால் வருகிறேன்...

### உஷாந்

மூனு மாசமா ஒரு கம்பனியில் வேலை பார்த்திட்டு இருந்தியே ஏண்டா வேலைய விட்டுத் தூக்கிட்டாங்க?

நான் சோம்பேறியா இருக்கேனாம் அதான்...



இதை கண்டு பிடிக்கவே மூனு மாசம் ஆகியிருக்கே அவன் எவ்வளவு சோம்பேறியா இருப்பான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசாங்கம் ஒரு கொலைகார அரசாங்கம்

## சஜித் பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதியை வெளியேற வேண்டும் என மக்கள் கோரிவரும் நிலையில், ஒரு தரப்பினர் பிரதமர் தலைமையில் அரசாங்கத்தை முன்னெடுக்குமாறு தெரிவித் துள்ளனர். இவைதானா அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதியபொருளாதாரப்பாதையை காண்பிக்க ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டி வருகிறது.

மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாக மாற்ற ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது?

கடன் தொடர்பான பல்தரப்பு கலந்துரையாடல் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தியா, சீனா, ஜப்பானுடன் அரசாங்கம் பேச்சு நடத்தியுள்ளதா? பணவீக்கத்தை குறைக்க உற்பத்திக் கைத்தொழிலை ஊக்குவிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

ரம்புக்கனையில் போராடிய ஒருவரை அரசாங்கம் கொலை செய்துள்ளது. ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளும் இந்த அரசாங்கத்தில் தான் உள்ளார்கள். இந்த அரசாங்கம் ஒரு கொலைகார அரசாங்கமாகும்.

விவசாயிகள், மீனவர்கள், மத்திய தரவர்க்கத்தினர் என அனைவரும் இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கான நிவாரணம் என்ன? இவற்றுக்கு அரசாங்கம் பதில் வழங்க வேண்டும்.

மக்களை தொடர்ந்தும் ஏமாற்றவா இந்த அரசாங்கம் முயற்சித்து வருகின்றது? இவற்றுக்கு எல்லாம் அரசாங்கம் பதில் கூற வேண்டும் எனசஜித் பிரேமதாஸ இவ்வாறு உரையாற்றிய போது, குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நாளாந்த சபை நடவடிக்கைகளைக் கொண்டு செல்ல ஒத்துழைப்பினை வழங்குமாறு கோரினார்.



அமைதியாக இருந்து தனக்கு ஒத்துழைப்பினை வழங்குமாறு கோரிக்கை விடுத்தும் சபை நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டதால் சபாநாயகர் சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். (நி-6)

# 13 ஆம் திருத்தச் சட்டத்தினை விட்டுக்கொடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், "தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாக பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக, அமரர் அ. அமிர்தலிங்கமும், மலையக மக்களின் தலைவராக விளங்கிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் முஸ்லிம் மக்களின் தலைவராக விளங்கிய மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் ஆகியோர், சிறுபான்மை தேசிய இனங்களின் நலன்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சிறந்தது என்ற கருத்தினை வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போது, சிறுபான்மை தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் உட்பட பெரும்பாலான அரசியல் தரப்புக்கள், நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து வருகின்றன. தற்போதைய ஜனாதிபதியும் குறித்த நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இந்நிலையில், ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியை பொறுத்தவரையில், அரசியல் அமைப்பில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படினும், தற்போதைய அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்கள் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம்" என்று தெரிவித்தார். (நி-6)

# "கோட்டா கோ ஹோம்" எனக் கூறுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள்

## போராட்டக்காரர்களுக்கு கீதா குமாரசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

"கோட்டா கோ ஹோம்" எனக் கூறுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள் என போராட்டக்காரர்களுக்கு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்

1971 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். அவர் வீடு செல்லவில்லை. அதன்பின்னர் ஜேஆரை எதிர்த்தனர். அவரும் வீடு செல்லவில்லை. எனவே, கோட்டா கோ ஹோம் என்ற பிரசாரத்தை உடன் நிறுத்துங்கள் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

காலம் வரும்போது ஜனாதிபதி நிச்சயம் செல்வார். அவர் வீடு செல்ல வேண்டுமா என்பதை தேர்தலில் தீர்மானிக்கப்படும். காலி முகத்திடலில் உள்ள இளைஞர்களை சிலர், விற்று பிழைக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சராக விஜித பேருகொட

(கொழும்பு)

மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித பேருகொட நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சராக நேற்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் மீண்டும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

துறைமுகம் ம்றறும் கப்பல் துறை இராஜாங்க அமைச்சராக கடந்த 19ம் திகதி இவர் பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இலங்கைக்கு ஆதரவு வழங்க யு.என்.டி.பி. தயார்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைத் தணிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்காக வோஷிங்டனில் இருக்கும் நிதியமைச்சர் அலி சப்ரி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போதே ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் சாதகமான பதிலினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய கடன் நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவ ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இராசிபலன்

23.04.2022
சித்திரை 10, சனிக்கிழமை
சப்தமி முற்பகல் 10.08 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 10.11 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை

சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம்

வளவன்



செய்தொழில் மேன்மையுண்டு, நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



நம்பி வந்தவர்களுக்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் வாய்ப்புண்டு, வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.



பெரியோர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.



மனக் குழப்பம் தீர்ந்து மதிப்பும் மரியாதையும் உயரும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.



நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள்.



மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.



நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.



குடும்ப மகழ்ச்சி அதிகரிக்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாயம் வருமானால் பட்ட கஷ்டம் மறந்து விடும்

# வடமராட்சியில் எரிபொருளுக்காக குவிந்த ஆயிரக்கணக்கானோர்



(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை கிராமக்கோடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்புவதற்காக மக்கள் தமது வாகனங்களுடன் கொளுத்தும் வெயிலிலும் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வடமராட்சியில் கடந்த இரண்டு நாட்களாக எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் 6,600 லீற்றர் பெற்றோல் புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதை அறிந்த மக்கள் அங்கு கூடினர். இதன்போது 1000 இற்கும் அதிகமான மோட்டார் சைக்கிள் மற்றும் நூற்றுக்கணக்கான முச்சக்கர வண்டிகள் மிக நீண்ட வரிசையில் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் காத்திருந்து பெற்றோலை பெற்றுக் கொண்டு சென்றனர். (4-6-60)

# ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும்

(குப்பிழான்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொதுநூலக மண்டபத்தில் இணுவில் பொதுநூலகத் தலைவர் ந.ஸ்ரீஅரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி விழா நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ம.பிரதீபன், சுன்னாகம் பொது நூலகப் பிரதம நூலகர் திருமதி.சு.ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-18)




யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் முதன் முறையாக நடைபெற்ற ஒருவருட சிரேஷ்ட தாதியர் பயிற்சியை முடித்து பல தாதிய உத்தியோகத்தர்கள் அண்மையில் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (படம்:- ரவிசாந்)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

(குப்பிழான்)

தாயும், மகளும் வெளிநாடொன்றிலிருந்து தமது சொந்த ஊரான குப்பிழான் கிராமத்திற்கு வருகை தந்து வீடொன்றிலிருந்து தங்கியிருந்த நிலையில் அவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன் குப்பிழான் தெற்கு, குறிஞ்சிக்குமரன் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்றது. அதிகாலை 4 மணியளவில் அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற திருடர்களில் ஒருவன் யன்னல் ஊடாக வீட்டிற்குள் நோட்டமிட்டுள்ளான். இந்நிலையில் திருடனை வீட்டிலிருந்தவர்கள் அவதானித்ததையடுத்து வீட்டிலிருந்தவர்கள் உரத்துச் சத்தமிட திருடர்கள் ஏமாற்றத்துடன் அங்கிருந்து தப்பிச் சென்றனர். (4-6-18)

# அத்தியாவசியப் பொருட்கள், சேவைகள் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல்



(குப்பிழான்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், சேவைகள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் எரிபொருள் பாவனை, சிறுபோகத்திற்கான பசளையின் தேவைப்பாடு, சமூக அமைதியின்மை தொடர்பான அறிக்கையிடல், மாவட்டத்தின் உணவுத் தேவைப்பாடு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (4-6-18)



2022 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கிராமத்திற்கு மூன்று மில்லியன் திட்டத்தின் கீழ் நேற்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்வயல் ஜே/305 கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம் : சுபேசன்)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அமரர். செபமாலை ஜெறின் சனின் முதலாம் ஆண்டு நினைவாக நாவாந்துறை சென்.மேரிஸ் இளைஞர் கழகம் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

# கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த சாந்த நாயகி பார்த்தீபன் என்பவரின் 196353304169 இலக்க முடைய தேசிய அடையாள அட்டையும் வங்கிப் பத்திரங்களும் தவற விடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எனவே உரிமையாளர் தகுந்த ஆதாரத்தைக்காட்டி யாழ்ப்பாணம் வலம்புரி பத்திரிகை அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளவும். (4-6)

# திருமறைக்கலாமன்றத்தின் ஆய்வரங்கம் நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர். அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக்கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் பத்தாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் "ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றில் மரியசேவியர் அடிகளின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியரும், கலை இலக்கிய செயற்பாட்டாளருமான ந.குகபரன் ஆய்வினை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலிஇலக்கம்789 364 4809, கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும். (4-6)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வி.ஜெகநாதனின் "பெண்ணாய் ஒரு முறை பிறப்பாய் போற்றி" ஆகமக் கடவுள்களிடம் சில கேள்விகள் எனும் நூல் வெளியீட்டு விழா நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தேசிய சமாதான பேரவையின் செயற்றிட்ட முகாமையாளர் ஞா.வொட்கின்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இரா.செல்வவடிவேல், அருட்பணி யோசப் ஸ்ராலின் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# கல்விமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தினால் கல்விமாணி ஆரம்பக் கல்வி (Bachelor of Education Honours in Primary Education) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்த மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இக்கற்கை நெறிக்கு நிகழ்நிலையில் 17.05.2022 வரை விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் பதவி விலகி
# மகாசங்கத்தினர் ஏற்றுக்கொண்ட
## இடைக்கால அரசிற்கு இடமளிக்க வேண்டும்



(கொழும்பு)
நாட்டு மக்கள் ஒன்றிணைந்து தீர்வு கோரி வீதிக்கிறங்கியுள்ள நிலையில் பாராளுமன்றம் ஒன்றுபடாமல் இருப்பது வெட்கப்பட வேண்டியதொரு நிலையாகும்.

பிரதமர் ஓய்வு பெறும் காலம் தோற்றம் பெற்றுள்ளதால் அவர் பதவி விலகி மகாசங்கத்தினர் ஏற்றுக் கொண்ட இடைக்கால அரசாங்கத்திற்கு இடமளிக்க வேண்டும் என உதய கம்மன்பில சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தொடரில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவையில் அமைதியாக இருக்க வேண்டாம். அமைதியாக இருந்தால் மக்களின் போராட்டம் ஒருபோதும் குறைவடையாது. பொறுமையிழந்த மக்கள் அரச தலைவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாது அரச அதிகாரத்தை கையிலெடுத்துள்ளார்கள்.

இடைக்கால அரசாங்கத்தை மகாசங்கத்தினர் உட்பட அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மக்கள் ஒன்றிணைந்து பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதிக்கிறங்கியுள்ளார்கள். பாராளுமன்றில் இன்றும் ஒரு தீர்வு காணாமல் இருப்பது வெட்கப்பட வேண்டிய ஓர் விடயம்.

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும். பிரதமர் பதவி விலகி ஓய்வுப் பெறுவதற்கான காலம் தோற்றம் பெற்றுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-6)

## இளைஞர்கள் போராட்டத்தை நிறுத்தக் கூடாது
## சரத் பொன்சேகா கோரிக்கை

(கொழும்பு)
அரசியலமைப்புத் திருத்தங்கள் நாட்டின் அரசியல் நெருக்கடியை தீர்க்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலமைப்புத் திருத்தம் இலங்கைக்கு எவ்வாறு உதவும் என்று எனக்குத் தெரியவில்லை. அரசியல் கலாசாரத்தில் மாற்றம் தேவை. அரசியலமைப்புத் திருத்தமோ, இடைக்கால அரசாங்கத்தை நியமிப்பதோ அந்தத் தருணத்தில் இலங்கைக்கு உதவப் போவதில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தாலும் பயனில்லை. வீதியில் இறங்கி போராட்டம் நடத்துபவர்கள் அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை விரும்புகின்றனர். போராட்டங்களை நடத்தும் இளைஞர்களுக்கு எங்கள் ஆசீர்வாதமும் ஆதரவும் உண்டு.

எனவே வீதியில் நிற்கும் இந்த இளைஞர்களிடம் போராட்டத்தை கைவிட வேண்டாம் என நான் கூற விரும்புகின்றேன். வெற்றி அவர்களின் கையில் உள்ளது. பொதுமக்களும் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு தேவையானவற்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என அவர் தெரிவித்தார். (நி-6)

## மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம்

(கொழும்பு)
மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய மீனவர்களின் சிறிய படகுகளுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (நி-6)

# பால்மாவின் விலையை
## மீளவும் அதிகரிக்க தீர்மானம்?

(கொழும்பு)
அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், அடுத்த வாரத்தில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பால்மா அடுத்த வாரம் நாட்டுக்கு வரவிருக்கும் நிலையில், பங்குகள் வந்த பிறகு விலை அதிகரிப்பு குறித்து முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு கிலோ பால்மாவின் விலையை 1,345 ரூபாவிலிருந்து 1,945 ரூபாவாகவும், 400 கிராம் பால்மாவின் விலை 540 ரூபாவிலிருந்து 800 ரூபாவாகவும் அண்மையில் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உண்ணாவிரதப் போராட்டத்தில்
## ஈடுபட்டிருந்த தேரர் மருத்துவமனையில்

(கொழும்பு)
காலி முகத்திடலில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தெரிபெஹே சிறிதம்ம தேரர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி முதல் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 53 சூரி 10 செவ் 2 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: கட்டட பராமரிப்பு, சொந்தக் கட்டடங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளன. Monthly income: Over 1 Million<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12533 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: சூரி 2 செவ் 4 இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12591 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 16 சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: மிசின் ஓட்டுநர் (டுபாய்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12534 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:பரணி 1<br>கி.பா: 50 சூரி 4 செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில் BSc Agriculture (Hons)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/12592 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 21 சூரி 1 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: BSc (Hons)Q.S<br>எதிர்பார்ப்பு: படித்த அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12535 | பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 75 ¾ சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L மேக்கப் தையல்<br>எதிர்பார்ப்பு :உள்நாடு வெளிநாடு ko ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ:G/12593 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: உயர்தரம் பாம் முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12537 | பிறப்பு: 1997 இந்து நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: சூரி 8 செவ் 10 இல்<br>தகைமை/தொழில் :BSc in IT software Developer in CSDB Pvt ltd<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/12594 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்று[illegible]
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா :500 அறவிடப்படும்.



70 வது பிறந்த தின வாழ்த்து




மீசாலை வடக்கினைச் சேர்ந்த
திரு.
மயில்வாகனம்
நாகேஸ்வரன்
அவரது
70 ஆவது பிறந்த
தினத்தினை இன்று
23.04.2022 இல்
இறைவன்
கிருபையால்
கொண்டாடுகின்றார்.
அவரை குடும்பத்தினர்,
உறவினர்கள்,
நண்பர்கள்
வாழ்த்துகின்றனர்.

TP : 077 610 5193
076 896 0821
(11121)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 27

# விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி



பதிமூன்று வயதில் படிப்பு போச்சு! வீட்டில் வறுமை! தொடர்ந்து பல நாட்களாக பசி! வேலை தேடித் தேடி அலுத்துப் போயிற்று!

ஒருநாள், பசியால் மயக்கமடைந்து ஒரு நாடகக் கொட்டகை வாசலில் செருகும் கண்களுடன் அமர்ந்திருந்தான் ஒரு சிறுவன்.

ஒரு பணக்காரர் குதிரையில் நாடகம் பார்க்க வந்தார்.

சிறுவனிடம்,"டேய்! இங்கே கட்டிவிட்டு செல்லும் குதிரைகள் காணாமல் போகின்றன. நீ இதைப் பார்த்துக் கொள். வரும் போது காசு தருகிறேன்," என்றார்.

"ஆஹா... இப்படி ஒரு வேலையா?" சிறுவன் ஆர்வமாகத் தலையாட்டினான்..

மகிழ்ச்சியுடன் எழுந்தான். நாடகம் முடிந்து பணக்காரர் வெளியே வந்தார். வெளியே நிற்பது தன் குதிரை தானா என்ற சந்தேகம் வந்து விட்டது. குதிரையைச் சுத்தப்படுத்தி, சேணத்தை பளபளப்பாக துடைத்து வைத்திருந்தான் சிறுவன்.

சற்று அதிகமாக பணத்தை அவனிடம் நீட்டினார் பணக்காரர்.

சில்லரை கிடைக்குமென நினைத்தவனின் கையில் பணம்... சந்தோசமடைந்தான்.

மறுநாள், நாடகம் பார்க்க வந்த மற்றவர்களும் குதிரையை அவனிடம் ஒப்படைக்க, அவற்றையும் பாதுகாத்து, சுத்தப்படுத்திக் கொடுத்தான்.

வருமானம் பெருகவே, குதிரை லாயமே அமைத்து, உதவிக்கு வேலைக்கு ஆள் அமர்த்தி முதலாளியாகி விட்டான்.

அதோடு விட்டானா! நாடகங்களையும் கவனித்து மிகப்பெரிய இலக்கிய மேதையாகி விட்டான். அந்தச் சிறுவன் தான், உலகப்புகழ் பெற்ற இலக்கிய மாமேதை ஷேக்ஸ்பியர்.

மனிதர்களுக்கு எப்போது வேண்டுமானாலும் வாய்ப்பு வரும்.

வருகிற வாய்ப்பை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், குதிரைக்காரனும் குபேரனாகி விடலாம். வாய்ப்புகளை பயன்படுத்துகின்றவர்கள் வெற்றிகரமாக வலம் வருவர்...

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

### உளவு பார்த்த சீன புகைப்படக்கலைஞருக்கு 14 ஆண்டுகள் சிறை

(பீஜிங்)

வெளிநாட்டு நபருக்கு உளவு பார்த்ததற்காகவும், சட்டவிரோதமாக அரச இரகசியங்களை வழங்கியதற்காகவும் சீன புகைப்படக்கலைஞருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

குறித்த சீன நாட்டுப் புகைப்படப்பிடிப்பாளர் "வீஷெட்" செயலி மூலம் வெளிநாட்டு நபரான "சகோதரி குய்" என்பவருடன் நட்பு கொண்டுள்ளார். இந்த புகைப்படங்களில் இராணுவ இரகசியங்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் பல இருந்துள்ளன. இவற்றைவெளிநாட்டு நட்பிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனடிப்படையில் குறித்த நபருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் 5 ஆண்டுகள் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. (நி-6)

# ஆப்கா...

❖ 3...

❖ 10...

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் ... குண்டு வெடிப்புக்களி... நூற்றுக்கு மேற்பட் போ... அதிகாரிகள் மற்றும் ...**

மசார்-இ-ஷெரிப் நகரில் உள்ள ஷியா மசூதியில் முதல் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்தக் குண்டு வெடிப்பில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டதாகவும், 87 பேர் படுகாயமடைந்ததாகவும் பி.பி.சி

## ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க தடை விதிப்பு

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான படையெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, நடப்பு ஆண்டிற்கான விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யா, பெலாரஸ் நாட்டு வீரர்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 27ஆம் திகதி தொடங்கி ஜூலை 10ஆம் திகதி வரை விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நடைபெறுகின்றன. இங்கிலாந்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் ரஷ்ய மற்றும் பெலாரஸ் வீரர்களுக்கு விம்பிள்டன் போட்டியில் கலந்து கொள்ள தடை விதிப்பதாக டென்னிஸ் கிளப் அமைப்பு அறிவித்துள்ளது.

ரஷ்ய படையெடுப்புக்கு உறுதுணையாக இருந்ததால் பெலாரஸ் நாட்டு வீரர்களுக்கும் போட்டியில் பங்கேற்க தடை செய்யப்படுகிறது.

இதன்மூலம் உலகின் சிறந்த டென்னிஸ் வீரர்கள் பட்டியலில் 2-வது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ், 8ஆவது இடத்தில் இருக்கும் ஆண்ட்ரி ரூப்ளேவ் ஆகியோர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே உலகக் காற்பந்து போட்டியில் ரஷ்யா பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 'Z'என்ற எழுத்தை புறக்கணிக்கும் புடினுக்கு எதிரானவர்கள்

(கீவ்)

'Z' என்ற எழுத்து உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு ஆதரவான சின்னமாக மாறியுள்ளது,

இந்தநிலையில் அரசியல் வாதிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பிறரால் இந்த எழுத்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

மத்திய நகரமான டியூமனில் உள்ள ஒரு மண்டபத்தில் போர் எதிர்ப்பு ரொக் இசைக்குழு நிகழ்ச்சி ஒன்றை நடத்தத் திட்டமிடப் பட்டது.

எனினும் Z என்ற எழுத்து குறித்த மேடையில் குறிக்கப்பட்டிருந்தமையால், போருக்கு எதிராகவும் விளாடிமிர் புடினுக்கும் எதிராக பலமுறை பேசிவரும் குழுவின் முன்னணி பாடகர் அந்த மேடையில் நிகழ்ச்சியை நடத்த மறுத்து விட்டார்.

Z என்ற எழுத்துக்கு பல அர்த்தங்கள் கூறப்பட்டாலும், உக்ரைன் படையெடுப்புக்கு முன்னதாக கிழக்கு உக்ரைன் பிராந்தியங்களை சுயாதீன பிராந்தியங்களாக ரஷ்யா அங்கீகரித்த தினமான 22.02.2022 என்பதை குறிக்கும் 2 என்ற எண்ணே பின்னர் Z ஆக மாற்றப் பட்டது என்று கூறப்படுகிறது.

அதேநேரம் உக்ரைனுக்கும் செல்லும் வழி Z போன்று அமைந்திருப்பதாலும் அந்த எழுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ானில் தொடர் குண்டு வெடிப்புகள்

- 39 பேர் உயிரிழப்பு
- 108 பேர் படுகாயம்

**ானில் நேற்று இடம்பெற்ற நான்கு பாரிய ...க்களில் 39 பேர் கொல்லப்பட்டதாகவும், ...ட் டோர் படு காயமடைந்ததாகவும் உள்ளூர் ...றும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**



தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள ஐ.எஸ். அமைப்பு, ஷியா மசூதி வழிபாட்டாளர்களால் நிரம்பியிருந்த போது, பை ஒன்றில் இருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகத் தெரிவித்தது.

ஐ.எஸ் முன்னாள் தலைவர் மற்றும் செய்தித் தொடர்பாளரின் மரணங்களுக்கு "பழிவாங்கும்" உலகளாவிய பிரசாரத்தின் ஒரு பகுதி என இந்தத் தாக்குதல் குறித்து ஐ.எஸ். தெரிவித்துள்ளது.

இரண்டாவது குண்டு வெடிப்பானது, குண்டூஸ் பகுதியில் உள்ள காவல்நிலையம் அருகே வாகனம் ஒன்று வெடித்ததன் மூலம் நிகழ்ந்தது. இதில், 4 பேர் உயிரிழந்தனர்.

18 பேர் படுகாயமடைந்தனர் என, பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கும் ஐ.எஸ் உரிமை கோரியுள்ளது.

கிழக்கு நங்கர்ஹார் மாகாணத்தில் வீதியோர கண்ணிவெடியில் தலிபான் வாகனம் சிக்கியதில் நான்கு தலிபான் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

நான்காவது குண்டு வெடிப்பு ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் உள்ள நியாஸ் பெய்க் பகுதியில் இடம்பெற்றது.

புதைக்கப்பட்ட கண்ணி வெடி வெடித்ததில் இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்தனர். (நி-6)

# சுவீடன், பின்லாந்து நேட்டோவில் இணைய கனடா ஆதரவு வழங்கும் - ஜஸ்ரின்ட்ரூடோ



(ஓட்டாவா)

நேட்டோ இராணுவக் கூட்டணியில் சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் சேருவதற்கு கனடா ஆதரவாக இருக்குமென கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் இணைவதை ஆதரிக்கிறீர்களா என அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறுகையில்,

'நேட்டோவில் சேர விரும்பும் சுவீடன் மற்றும் பின்லாந்தைச் சுற்றி உரையாடல்கள் நடந்து வருகின்றன. நிச்சயமாக கனடா, அதற்கு மிகவும் ஆதரவாக இருக்கும்.

கடந்த பெப்ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு நாடுகளும் தற்காப்பு இராணுவக் கூட்டணியின் ஒரு பகுதியாக மாற ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. தற்போது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு இரு நாடுகளையும் நேட்டோ இராணுவக் கூட்டணியில் சேரத் தூண்டியுள்ளது.

நேட்டோ இராணுவக் கூட்டணியில் சேருவதற்கு எதிராக ரஷ்யா சுவீடன், பின்லாந்து ஆகிய இரு நாடுகளையும் எச்சரித்துள்ளது.

இது ஐரோப்பாவில் ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்காது என்றும், சுவீடன் மற்றும் பின்லாந்துக்கு இராணுவ மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் இதற்கு பதிலடி நடவடிக்கைகளுடன் ரஷ்யா பதிலளிக்கும் என்றும் நேட்டோவில் சேரப்போவதில்லை என்று உக்ரைன் உறுதியளிக்க மறுத்ததே படையெடுப்புக்கான ஒரு காரணம் என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இதன்போது சுட்டிக் காட்டினார். (நி-6)

# சிங்கப்பூரில் போதைப்பொருள் கடத்தல் மலேசிய தமிழருக்கு தூக்குத்தண்டனை

(கோலாம்பூர்)

சிங்கப்பூரை பொறுத்தவரை 15 கிராமுக்கு மேல் ஹெரோயினுடன் பிடிபட்டால் மரணதண்டனை விதிக்க அந்நாட்டு சட்டத்தில் இடம் உள்ளது.

மலேசியாவைச் சேர்ந்தவர் நாகேந்திரன் தர்மலிங்கம், தமிழ் வம்சாவழி இளைஞரான இவர் கடந்த 2009-ஆம் ஆண்டு 42.72 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தியதாக கைது செய்யப்பட்டார். அவருக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அவரை தூக்கில் போட இருப்பதாக அவரது தாய்க்கு கடிதம் அனுப்பப்பட்டது. அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என தாயார் தெரிவித்த நிலையில் மனநலம் குன்றிய அவரை தூக்கில் போடுவதை நிறுத்தி வைக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. மேலும் மேல் முறையீட்டு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் நாகேந்திரன் தர்மலிங்கம் ஹெரோயின் கடத்திய போது நல்ல மன நிலையில் தான் இருந்தார் என மனநல நிபுணர்கள் சான்றிதழ் அளித்து உள்ளதாக சிங்கப்பூர் அரசு சார்பில் கூறப்பட்டது.

மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையின்போது தர்மலிங்கத்துக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.


இதனால் அவரது மரண தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் அவர் தூக்கில் இருந்து தப்பினார்.

இதற்கிடையில் மரண தண்டனையை குறைக்க வேண்டும் என்ற கடைசி மேல் முறையீட்டு மனுவை சிங்கப்பூர் கோர்ட்டு கடந்த மாதம் 29 ஆம் திகதி தள்ளுபடி செய்தது.

இதையடுத்து அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை தூக்கில் போட இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக அங்குள்ள பத்திரிகைகள் தெரிவித்து உள்ளன. (நி-6)

## உலக பூமி தினம்

# சிறப்பு டூடுளை வெளியிட்டது கூகுள்




(வோஷிங்டன்)

உலக நாடுகள் முழுவதும் "உலக பூமி தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த உலக பூமி தினத்தை கொண்டாடும் வகையில் சிறப்பு டூடுளை வெளியிட்டுள்ளது கூகுள் நிறுவனம்.

1970 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 ஆம் திகதி சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், பூமி மாசுபடுவதை குறைக்கும் வகையிலும் 'பூமி தினம்' கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்., மன்னாரைச் சேர்ந்த 18 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)

இலங்கையில் இருந்து மேலும் 4 குடும்பத்தைச் சேர்ந்த 17 நபர்களும் தனி நபர் ஒருவர் உள்ளடங்கலாக 18 பேர் அகதிகளாக தமிழகத்தில் நேற்று தஞ்சம் அடைந்துள்ளனர்.

அதில் மன்னாரைச் சேர்ந்த 3 குடும்பங்களின் 13 பேரும், யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் 4 நபர்களும், தனி நபர் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதனால் இலங்கையில் வசிக்கும் மக்கள் உணவுப் பொருட்கள் வாங்க முடியாமல் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இதன் காரணமாக கடந்த புதன்கிழமை வரை 42 இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்கு அகதிகளாக வந்து முகாம்களில் தங்கியுள்ள நிலையில் தற்போது நான்கு மாத கர்ப்பிணி,ஒன்றரை வயது குழந்தை உட்பட 4 குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 18 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை 60 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4-6-18-285)



தேசிய புத்தக தினத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபையினால் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சி நேற்று நடைபெற்றது. (படம் : சப்தசங்கரி)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்ற வெளிப்படுத்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, மானிப்பாய் வீதி ஆதன இலக்கம்: 106 என்ற இலக்கத்தை கொண்டதும் "காலம்புரை" நிலப்பரப்பு 01 பரப்புகுளி 11.5 கொண்ட கிராம சேவையாளர் பிரிவு : J/262,கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் வடக்கு இறையில் அமைந்துள்ளஆதனத்தின் உரிமையாளர் பெயர்: பொன்னையா சின்னப்பு என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை இராதம்பு, கோப்பாய் வடக்கை சேர்ந்த குமாரசாமி கெங்காதரன் பெண் சசிகலா என்பவர் நிலப்பரப்பு 01 பரப்புகுளி 11.5 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்குறித்த இல: 106, மானிப்பாய் வீதி ஆதனமானது (நிலப்பரப்பு 01 குளி 11.5) சமர்ப்பிக்கப்பட்ட மாதிரித்திரட்டின் படி பிரசித்த நொத்தாரிசு திரு.தம்பையா வேலாயுதம் அவர்களால் எழுதப்பட்ட 4564 இலக்க 09.02.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் சுகுணன் பெண் சத்தியவாணி என்பவரிடமிருந்து குமாரசாமி கெங்காதரன் பெண் சசிகலா என்பவரிற்கு தரப்பற்றிக் கொண்ட ரூ 500,000.00 கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு 01 குளி 11.5 இற்கு எல்லைகளாக கிழக்கு ஒழுங்கை முகப்பும் கந்தையா தெய்வேந்திரத்தின் ஆதனம், வடக்கு பொதுக்கிணறும் கந்தையா சுப்பிரமணியத்தின் ஆதனம், மேற்கு சின்னப்பு சுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு மானிப்பாய் கைதடி வீதி. இவ்வாதனம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு.த.தேவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 706 ஆம் இலக்க 26.04.1979 ஆம் திகதிய படத்தில் Lot – 01 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தினை குமாரசாமி கெங்காதரன் பெண் சசிகலா என்ற பெயருக்கு ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 06.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குமாரசாமி கெங்காதரன் பெண் சசிகலா என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
23.04.2022

(C-4214)




தேசிய சமாதான பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி மையம் இணைந்து மன்னார் மாவட்டத்தில் பிரதேச ரீதியில் முன்னெடுத்து வந்த மத சகவாழ்விற்கான கூட்டு ஈடுபாடு செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சர்வ மத குழுவின் ஊடாக இளைஞர்களை மத ரீதியாக நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான செயற்றிட்டத்தின் விளக்க அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனியார் விருந்தினர் விடுதியில் ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது. (படம் : ஜோசப்நயன்)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்ற வெளிப்படுத்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03, மானிப்பாய் வீதி ஆதன இலக்கம் 235 என்ற இலக்கத்தை கொண்டதும் "கொழுவியன்கலட்டியும் தேற்றாவடியும் தேற்றாகலட்டியும்" நிலப்பரப்பு 19 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J/261, கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் வடக்கும் தெற்கும் இறையில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் எஸ்.சிவக்கொழுந்து என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை "ஞானகிரி" ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவபாலன் (600730517V) என்பவர் நிலப்பரப்பு 19 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்குறித்த இல: 235, மானிப்பாய் வீதி ஆதனமானது (நிலப்பரப்பு 19) சமர்ப்பிக்கப்பட்ட மாதிரித்திரட்டின் படி பிரசித்த நொத்தாரிசு திரு.நாகேந்திரன் பார்த்திபன் அவர்களால் எழுதப்பட்ட 639 ஆம் இலக்க 14.03.2020 ஆம் திகதிய திருத்தலும் பிரகடனப்படுத்தலும் உறுதி மூலம் தனது பெற்றோரின் மரணத்தின் பின்னர் மறு பங்காளரின் சம்மதத்துடன் நீண்ட நெடுங்கால ஆட்சிப்படி நிந்தமாக சிவசுப்பிரமணியம் சிவபாலன் (600730517V) என்பவரிற்கு வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு 19 இற்கு எல்லைகளாக கிழக்கு குறித்த படத்தில் துண்டு 5, வடக்கு பிரதான வீதி. மேற்குறித்த படத்தில் துண்டு 3 ஆன 12½ அடி அகலப்பாதை. தெற்கு சதாசிவம் சிவக்கொழுந்துவினதும் மறுபேரினதும் ஆதனம். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.பொன்னுத்துரை அவர்களால் அளந்து வரையப்பட்ட 172 ஆம் இலக்க 03.10.1973 ஆம் திகதிய படத்தில் Lot – 04 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தினை சிவசுப்பிரமணியம் சிவபாலன் என்ற பெயருக்கு ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 07.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவசுப்பிரமணியம் சிவபாலன் என்றபெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
23.04.2022

(C-4213)




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 350 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 220 | 300 | 300 |
| தக்காளி | 130 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 120 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 180 | 140 | 200 | 200 |
| பூசணி | 60 | 60 | 70 | 80 |
| புடோல் | 150 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 100-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 220 |
| பாகற்காய் | 400 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 180 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 180 |
| பயற்றங்காய் | 140 | 200 | 120 | 180 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 200 |
| பீற்றூட் | 150 | 160 | 150 | 200 |
| கறிமிளகாய் | 280 | 250 | 220 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 500 | 1200 |
| போஞ்சி | 200 | 350 | 300 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-80 | 70-90 |
| இராசவள்ளி | 180 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்



மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: க, கா, கி, கு, ஞ, ச, கே, கோ உள்ளவர்களுக்கும்

**மிதுன இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டில் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் தொடர்கிறது. வருடக் கடைசியில்தான் சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. அதேநேரத்தில் புத்தாண்டுக்கு முந்தைய தினம் குருப்பெயர்ச்சியும் நிகழ்ந்துள்ளது. இதனால் 10 இல் குரு சஞ்சரிக்கிறார். எனவே வருமானத்தைக் காட்டிலும் செலவு கூடும். தடைகளும், தாமதங்களும், ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கும். அவ்வப்போது வழிபாடுகளை மேற்கொள்வது, அனுபவஸ்தர்கள், அருளாளர்களின் ஆலோசனையைக் கேட்பதுதான் வாழ்க்கைப் பயணம் சிறக்க ஒரே வழி.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், உச்சம் பெற்ற சூரியனோடு சேர்ந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர்களோடு ராகுவும் இணைந்திருக்கிறார். சூரியன்-ராகு சேர்க்கை அவ்வளவு நல்லதல்ல. தொழிலில் இலாபம் கிடைக்கும். ஆனால் அது வந்த மறு நிமிடமே செலவாகிவிடும். தொழில் பங்குதாரர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் சில நடைபெறும், சில தடைப்படும். உத்தியோகத்தில் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், இப்பொழுது மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும்.

பஞ்சம ஸ்தானத்தில் கேது இருப்பதால், பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். அவர்களை நெறிப்படுத்த முடியாமலும், வழி நடத்திச் செல்ல இயலாமலும் கவலைப்படுவீர்கள்.

ஒரு காரியத்தை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழல் உருவாகும். சொந்தங்களோடும், சுற்றங்களோடும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டாம். மனக்குழப்பம் அதிகரிக்கும் இந்த நேரத்தில், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகம் தேவை.

அஷ்டமத்தில் சனி சஞ்சரிப்பதால் எதைச் செய்

## பத்தில் குரு; பதவியில் மாற்றம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

தாலும் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். திடீர், திடீரென சிச்சல்களும், சிரமங்களும் வரலாம். ஒருவருக்கு நீங்கள் செய்யும் நன்மை கூட, அவருக்கு தீமையாகத் தெரியும்.

பிறருக்கு பணப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்திருந்தால், அது நண்பர்களுக்குள் பகையை உண்டாக்கலாம். வம்பு, வழக்குகள் வாசல் தேடி வந்தாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

'10 இல் குரு இருந்தால் பதவி மாற்றம் வரும்' என்பது பழமொழி. ஆனால் உங்களைப் பொறுத்தவரை 10 இற்கு அதிபதியான குரு தன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது.

மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய தொழிலை தொடங்க ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலைப் பளு காரணமாக விருப்ப ஓய்வில் வெளிவருவர். நண்பர்களுடன் இணைந்து செய்ய நினைக்கும் தொழில் முயற்சி கைகூடும். ஆனால் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் இலாபம் ஏட்டில் இருக்குமே தவிர எதிரில் இருக்காது.

வருடத் தொடக்கத்தில் சுக்கிர மங்கள யோகம், புத ஆதித்ய யோகம், சந்திர மங்கள யோகம், சகட யோகம் போன்ற யோகங்கள் இருப்பதால் மலை போல் வந்த துயர் பனி போல் விலக, உங்கள் சுயஜாதக அடிப்படையில் யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, பக்தி மார்க்கத்திலும் ஈடுபாடு செலுத்துங்கள்.

ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று உடல்நலத்தை சீராக்கிக் கொள்ளுங்கள்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகிறது. வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 2 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடும்.

குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. சுபவிரயங்கள் அதிகரிக்கும். பொருளா




தாரமும் தேவைக்கேற்ப வந்து சேரும். தாய்வழி ஆதரவு உண்டு.

அசையாச் சொத்துக்களில் ஒன்றை விற்று மற்றொன்றை வாங்கும் அமைப்பு உண்டு. உத்தியோகத்தில் இருந்த நெருக்கடி அகலும். வேலைப்பளு குறையும் விதத்தில் வேறு இலாகாவிற்கு மாற்றப்படுவீர்கள். மறைமுக எதிர்ப்புகளை சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும்.

**சனியின் வக்கிரமும் பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10.2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். சனி அஷ்டமாதிபதியாகவும் இருப்பதால் வக்கிர காலத்திலும் உங்களுக்கு நன்மைகளைச் செய்யும்.

சுபச் செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகளும், சம்பள உயர்வும் உண்டு. 29.3.2023 முதல் கும்ப இராசிக்குச் சனி செல்கிறார். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு செல்லும் சனியால் பொன், பொருட்கள் சேரும்.

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

வருடம் முழுவதும் வளர்ச்சி கிடைக்க லட்சுமி கவசம் பாடி, லட்சுமி உடனாய விஷ்ணுவை வழிபடுவது நல்லது. வெள்ளிக்கிழமை வழிபட்டால் நல்லது நடக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். பிறரிடம் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் வரலாம். பிள்ளைகளை நெறிப்படுத்திக் கொள்வதோடு உங்கள் மேற்பார்வையிலும் வைத்துக்கொள்ளுங்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலிடத்து அனுகூலமும், கேட்ட சலுகைகளும் சனியின் வக்கிர காலத்தில் கிடைக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### தெளிந்த மனம்

நகரத்திலேயே பிறந்து வளர்ந்த நளினிக்கு கிராமத்தை முதல் தடவையாகப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. தன் மாமனின் மகளின் திருமணத்திற்கு மலை அடிவாரத்திலுள்ள அந்த ஊருக்கு அவள் வந்தாள். அவளது தந்தை மகாலிங்கம் நகரில் பிரபல வியாபாரி. தன் தங்கையின் மகளின் திருமணம் என்பதற்காக அவர் குடும்பத்தோடு வந்திருந்தார்.

திருமணம் முடிந்ததுமே மகாலிங்கம் நகருக்குக் கிளம்பினார். அப்போது நளினி தன் தந்தையிடம் "அப்பா! நான் இந்த ஊரில் ஒரு வாரம் இருந்து விட்டு வருகிறேன். இங்குள்ள மலை, வயல் வெளிகள் எல்லாம் எனக்குப் பிடித்திருக்கிறது" என்றாள். மகாலிங்கம் வேண்டாம் என்று சொல்வதற்குள் அவரது தங்கையின் இரண்டாவது மகளான விமலா அவரிடம் "மாமா! நளினிக்கு நான் இங்குள்ளவற்றையெல்லாம் சுற்றிக் காட்டுகின்றேன். அதன் பின் நகருக்கு அவளை நானே கொண்டு வந்து விடுகிறேன்" என்றாள்.

அவரது தங்கையும் நளினியை விட்டுவிட்டுப் போகும் படி வேண்டவே மகாலிங்கம் நளினியை அங்கேயே விட்டு விட்டு தன் மனைவியுடன் ஊருக்குக் கிளம்பினார்.

நளினி அங்கு மலைக் கோவிலைப் பார்த்தாள். மாந்தோப்புக்களைக் கண்டு களித்தாள். மாமாவின் ரோஜாத்தோட்டம் பிடித்தது. அங்கிருந்து காலையில் சூரியோதயம் பார்க்க அழகாக இருந்தது. தினமும் காலையில் அந்த அழகிய காட்சியைக் காண அவள் விமலாவுடன் அத்தோட்டத்திற்குச் சென்று வந்தாள்.

ஒரு நாள் விமலா உடல் நலமில்லாமல் இருக்கவே நளினி மட்டும் ரோஜாத் தோட்டத்திற்கு சென்றாள். அழகிய சூரியோதயக் காட்சியைக் கண்டு களித்து விட்டுத் திரும்பும் போது அவள் ஒரு பெரிய ரோஜா மலரை செடியில் கண்டாள். அவள் அதைப்பறிக்க முயன்ற போது அவள் காலில் சுருக்கென்று ஏதோ கடிப்பது கண்டு கீழே பார்த்தாள்.

ஒரு நாக பாம்பு சரசரவென்று ஊர்ந்து சென்றது. அதுதான் அவளைக் கடித்து விட்டது. அவள் மயங்கிக் கீழே விழுந்து விட்டாள். மறுபடியும் அவள் கண்ணைத் திறந்து பார்த்த போது ஒரு குடிசைக்குள் ஒரு கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தாள். சற்றுத் தூரத்தில் ஒரு வாலிபன் நாற்காலியில் அமர்ந்திருப்பதையும் கண்டாள்.

அவள் கண் விழித்ததைப் பார்த்ததும் அந்த வாலிபன் "அப்பாடா! சரியாகி விட்டதா? இப்போது தலைச் சுற்றல் எதுவும் இல்லையே?" என்று கேட்டான். அவளும் இல்லை என்று தலையை ஆட்டினாள். (தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




"வன்மை மிக்கவர் மானிடர் ஆகிவிட்டனர். உன் மருகி நாசி இழக்கும் நிலையை உண்டாக்கினர்; இதை விட நம் மரபுக்கு ஓர் இழிவு உண்டோ? கரனும் துஷணனும் உயிர் இழந்தனர் என்றால் இதை விட அவமானம் வேறு என்ன இருக்கிறது? இருகை சுமந்தாய்!' இனிதின் இருந்தாய்! கேட்டால் 'தவம் செய்கிறேன்' என்கிறாய்; ஒருவன் கட்டமைந்த வில்லால் இருவர் உயிரைப் பருகினான்; வெம்பிய மனத்தோடு வேகின்றேன், அவர்கள் எனக்கு ஒப்பிலார், என்பதால் போர் செய்யத் தயங்குகிறேன். பவளம் போன்ற செவ்வாய் வஞ்சியை வவ்வ உன் துணை நாடுகிறேன்; இப்பழியை நீதான் தீர்த்துத் தர வேண்டும்" என்றான்.

எரியும் நெருப்பிலே அரக்கை உருக்கிச் செவியில் கொட்டியதுபோல் இச் சொற்கள் கடுமையாக இருந்தன; காதுகளைப் பொத்திக் கொண்டு அச்சம் நீங்கிச் சினத்தோடு சீரிய உரைகள் பேசினான் மாரீசன்.

"மன்னர், நீ நின் வாழ்வை முடித்தாய்; மதி அற்றாய், நீ தேடிக் கொண்ட அழிவு அன்று இது. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுகிறது; செவிக்கு இன்னா எனினும், உனக்கு இதம் வேண்டி இவை சொல்கிறேன்.

"நீ தவம் செய்து பெற்ற செல்வமெல்லாம் அவமே அழிக்கிறாய், இழந்தவை மீட்க முடியுமா? அறவழியில் ஈட்டிய செல்வத்தை [illegible] அழிக்கிறாய்; பிறன் மனைவியைக் கவர்வது உன் பேராண்மைக்கு இழுக்காகும்; பாவமும் பழியும் சேரும், உன் கூட்டமே அழியும்; "கரன் உன்னை விட அதிகம் ஆற்றல் மிக்க சேனை கொண்டவன்; அவனை எதிர்க்க முடியாமல் தேரோடு மாண்டான்; விராதன் என்பவனைவிட வலிமை உடையவர் யார் இருக்கிறார்கள்? அவன் கதி என்ன ஆயிற்று? என் தம்பியான சுபாகுவும் என் தாயாகிய தாடகையும் இராமன் அம்புக்கு ஆற்ற முடியாமல் உயிர் விட்டனர்.

அவன் முன்னின்று போர் செய்ய முடியாமல் நான் உயிர் பிழைத்து ஓடி வந்து விட்டேன்; நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது; ஆற்றல் மிக்க அந்த இராமனோடு நீ மோதிக் கொள்கிறாய் என்று நினைக்கும் போது அச்சம் மிகுகிறது; அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு உன் ஆயுளை இழக்காதே!" என்று அறிவுரை கூறினான். "சீதையைக் கடத்திச் செல்வதில் யான் பின் வாங்கவில்லை; உன் குலத்தின் நலத்தைக் கருதித்தான் இவ்வளவும் சொல்கிறேன்; காமத்தால் கண்ணிழந்து நீ கருதியதை அடைய விரும்புகிறாய்; உன் ஆசைக்கு நான் குறுக்கே நிற்கவில்லை; உன் அழிவுக்குத் தடை போடுகிறேன்" என்றான்.

"நீ அறிவுரை கூற அமைச்சன் அல்லை; நான் இடும் கட்டளையை ஏற்று நீ நடந்து கொள்ள வேண்டும்; நீ ஒரு வீரன், தலைமையிடும் கட்டளையைத் தலைமேல் தாங்க வேண்டுமே தவிர, மற்றைய நிலைமைகளை எல்லாம் நீ பேசக் கூடாது; உயிருக்கு அஞ்சி நீ ஏதேதோ உளறுகிறாய்". "என் அழிவுக்காக யான் சிறிதும் கவலைப்படவில்லை; மூத்தவன் என்பதால் மூதுரை வழங்குகிறேன்; கட்டளையிடு; ஏற்கிறேன்" என்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தேவைகள் குறையும் அளவுக்கே
> தெய்வத்தன்மை அடைவோம்.
> – சாக்ரட்டீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புண்ணியத்தைப் பெருக்குவதற்கு சரியான சந்தர்ப்பம் இது

அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பார் மாணிக்கவாசகர்.

இறைவனை வணங்குவதாயினும் அதற்கும் இறைவனுடைய அருள் அவசியமாகின்றது.

ஆக, இறைவனை நினைப்பதற்கும் ஆலய தரிசனம் செய்வதற்கும் கூட இறைவனின் அருள் தேவைப்படுகிறது எனில், புண்ணியம் செய்வற்கும் புண்ணியம் தேவை என்பதை நாம் உணர முடியும்.

ஆம், இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பு எத்தன்மையதென்பதை நாளாந்தச் சம்பவங்களும் நிகழ்வுகளும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இதற்கு நல்ல உதாரணம் நம் நாட்டில் தற்போது நடக்கின்ற நிகழ்வாகும்.

யார் இந்த நாட்டைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பப்பட்டதோ அவர்களாலேயே நாடு அழிந்து விட்டது என்று மக்கள் கோசமிடுகின்றனர்.

தவிர, இனி ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியை யாராலும் தடுக்கவும் தவிர்க்கவும் முடியாது என்று யாரெல்லாம் கருதினார்களோ அந்த ஆட்சியாளர்கள் இனி நமக்கு வேண்டவே வேண்டாம் என்று மக்கள் கூறுமளவுக்கு நிலைமை வந்தாயிற்று.

இதுவே இறைவனின் படைப்பும் அவனின் நியதியுமாகும்.

உண்மை, குருசேத்திரப் போர் தொடங்குவதற்கு முன்னதாக, பகவான் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்கிறார்.

உனது கடமை எதுவோ அதனை நீ செய்தாக வேண்டும். இன்று உன்னுடையதாக இருப்பது நாளை இன்னொருவருடையதாகிறது என்ற உண்மைத் தத்துவம் உணர்த்தப்படுகிறது.

இதற்கும் மேலாக, தர்மத்தைக் காப்பாற்றவும் அதர்மத்தை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் எடுக்கிறேன் என்ற பகவானின் கூற்று எங்கும் எப்போதும் நடந்து கொண்டே இருக்கிறது.

ஆம், கன்மவினையில் இருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது.

இந்த உலகில் நீ எடுத்தவற்றை இங்கேயே விட்டு விட்டுப் போயாக வேண்டும். இதுவே நியதி.

ஆக, நாம் செய்த புண்ணிய பாவம் மட்டுமே எம்மைப் பற்றித் தொடரும். அதனால்தான் காதற்ற ஊசியும் வாராது காண்கடைவழிக்கே என்றார் பட்டினத்தடிகள்.

அன்புக்குரியவர்களே! இது புண்ணியத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய காலம். அதற்கான சந்தர்ப்பம் கடவுளால் தரப்பட்டுள்ளது.

எனவே எதைச் செய்தாலும் தர்மத்தோடு செய்யுங்கள். அதிலும் குறிப்பாக வர்த்தகப் பெருமக்கள் தர்மத்தின் வழியில் நடந்து கொள்வது மிக மிக அவசியமாகிறது.

நீங்கள் தர்மத்தோடு நடந்து கொள்ளும் போது, அதனால் எத்தனையோ மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

தர்மத்தின் வழியிலான உங்கள் வர்த்தகம் ஏழைகளின் பசியை ஆற்றும். வறியவர்களின் கஷ்டத்தைப் போக்கும்.

ஆகையால் உச்ச இலாபம் ஈட்டுவதற்கான கால சூழல் வாய்த்துவிட்டதெனக் கருதாமல், புண்ணியம் செய்வதற்கான சந்தர்ப்பத்தைக் கடவுள் நமக்குத் தந்தனன் என நினைத்து, தர்மத்தின் வழியில் – மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்து கொள்ளுங்கள்.

இந்தப் புண்ணியம் நீங்கள் பிறப்பெடுக்கும் போதெல்லாம் உங்களோடு வந்தாகும். இது சத்தியம்

## கட்டார் சிறையில் இருந்த 20 இலங்கையர்கள் விடுதலை

(கொழும்பு)

கட்டாரில் சிறையிலிருந்த 20 இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

புனித ரம்ழானை முன்னிட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அந்த பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை அபராதத் தொகை செலுத்தலில் இருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி-6)

## இலங்கைக்கான கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லையினை நீடித்தது இந்தியா

(கொழும்பு)

இலங்கைக்கான 400 மில்லியன் டொலர் கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லை இந்திய மத்திய வங்கியினால் நீடிக்கப்பட்டுள்ளது.


இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கும் பன்முகப்படுத்தப்பட்டதும் தாராளமானதுமான ஆதரவு தொடர்வதாகவும் உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (நி-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பிரிட்டிஷ் கவுன்சில் ரக்கா வீதி, பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் - மின் சாரசபை, ஆளுநர் விடுதி, யாழ். மாவட்ட செயலகம், விஞ்ஞான பீடம், தியாகி அறக்கொடை நிலையம், துளசிமஹால், யு.எஸ் விடுதி, றியோ கிறீம் ஹவுஸ், அரசடி பழம்வீதி சந்தி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்தி, கைலாச பிள்ளையார் கோவில், முலவை, நல்லூர்கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி சுண்டிக்குளி, கோயில் வீதி சந்தி, இராமநாதன் வீதி புகையிரதக் குறுக்கு சந்தி, விளான், சங்கானை, சங்கானை வைத்திய சாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கருணாட்டுக்கேணி சந்தி, கொக்கிளாய் மருத்துவனை, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத் தொடுவாய் வடக்கு (15 வது மைல் கல்லடி), பரராஜசிங்கம் தோட்டம், புளியமனைசந்தி, 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவமுகாம் - தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவமுகாம்-இரணைப்பாலை, 683 ஆம் பிரிவு இராணுவ முகாம், தேராவில், வெள்ளப்பள்ளம், 68 ஆவது வி.ஐ.ஆர். இராணுவமுகாம்-தேவிபுரம், டயலொக்கோபுரம்-வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, இடைக்காட்டு சந்தி, இனியவாழ்வு இல்லம், இருட்டுமடு, குறவில் உடையார்கட்டு, மூங்கிலாறு வடக்கு, சுதந்திரபுரம், தேராவில், வள்ளிபுனம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, சி.இ.சி.பி (சிலாபத்துறை), சிலாபத்துறை கடற்படை முகாம், கீரிஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர்வழங்கல்சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், நீர்வழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், நீர்வழங்கல்-தோட்டக்காடு, கார்கில்ஸ் பூட்சிட்டி-மன்னார், இலங்கை போக்குவரத்து சபை மன்னார், மன்னார் நகரம், அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்பு திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர் வழங்கல், ஆத்தி மோட்டை, கொன்வென்ட் வீதி, எழுத்தூர், எழில்நகர், ஹனைஎஸ்நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப் படையான், கொண்டச்சி திட்டம். கொண்டச்சி நீர் வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூளாங்குளம், கூளாங்குளம் திட்டம், (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, மூர் வீதி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, நளவன்பாடி புதுத் தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, ஒல்லி மோட்டை, பெரிய பொள்ளாச்சி பொற் கேனி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், பள்ளிமுனை, பாரிக் கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேனி (பண்டாரவெளி), பிச்சைகுளம், பிச்சைவாணிபங்குளம் திட்டம், பொன்தீவு கண்டல், கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சி குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி திட்டம், சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி, மன்னார் ஶ்ரீலங் காடெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், தம்பட்டமுசலி, யு.சிமைதானம் - மன்னார், வெள்ளி மலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### அறிவுக்குக் கிடைக்கின்ற பரிசு

❖ அறிவுக்குக் கிடைக்கின்ற மிகப்பெரிய பரிசு அறிவே. இரண்டாவதாக அதனால் பயனும் உள்ளது. அது நமது துன்பங்கள் அனைத்தையும் அகற்றிவிடும்.

❖ இயல்பாகவே என்றும் தூய்மையான, பூரணமான ஒன்றை நேருக்கு நேர் காண்பது போன்ற நிலையை-சொந்த மனதை ஆராய்வதால் மனிதன் என்றுமே அழியாத ஒன்றை அடைகிறான். அதன் பிறகு அவனுக்குத் துன்பமில்லை. துயரமில்லை.

❖ பயமும் நிறைவேறாத ஆசைகளுமே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம். தனக்கு மரணமில்லை என்பதை மனிதன் அறியும் போது அவனுக்கு மரண பயம் நீங்கி விடுகிறது.

❖ தன்னைப் பூரணன் என்று அறியும் போது அவனிடம் வீண் ஆசைகள் எழாது. இந்த இரண்டு காரணங்களும் இல்லாமல் போவதால் அதன் பின் துன்பம் அவனை அணுகுவதில்லை. இந்த உடலில் இருக்கும் போதே அவனுக்கு பூரண ஆனந்தம் உண்டாகிறது.

❖ இந்த அறிவைப் பெறுவதற்கு ஒரே உபாயம் தான் உள்ளது. அது ஒருமைப்பாடு.

மனதின் ஆற்றல்களையெல்லாம் ஒரு முகப்படுத்தியதால் தானே உலகில் உள்ள அறிவை மனிதன் பெற்றான். எவ்வாறு தட்ட வேண்டும், தேவையான உந்துதலை எப்படி அழிப்பது என்பது மட்டும் நமக்குத் தெரியுமானால் உலகம் தனது ரகசியங்களை அளிக்க தயாராக இருக்கிறது. அதற்கான [illegible] ஒருமைப்பாட்டின் மூலமே கிடைக்கிறது.

❖ [illegible] எல்லையே இல்லை. எவ்வளவுக்கு அதை ஒருமைப்படுத்துவீர்களோ, அந்த அளவிற்கு ஆற்றலை ஒரு மையத்தில் குவிக்க உங்களால் முடியும். இதுதான் ரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

49

அவற்றில் சில அம்பாறை, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை பிரதேசங்களுக்கு பல் உறுப்பினர் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்று மும்மொழிந்திருந்தன. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் மேலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.

**சில பரிந்துரைகள் அம்பாறை, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை பிரதேசங்களுக்கு பல் உறுப்பினர் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்று மும்மொழிந்திருந்தன. பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததால் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.**

அது மட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப் பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்க்ளின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக் கொண்டுள்ளது.

முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் முறையே 43%,39% மற்றும் 17% ஆக உள்ளடங்கி இருந்தது. இது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் அந்தந்த சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் தொகுதிகள் உருவாக்க முடியுமெனபதை குழு அவதானித்தது.

மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப்பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை.

எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற்றைய இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப்பங்களை அந்தப் பிரதேசங்களில் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

ஒரு பிரேரணையில் சமூகங்களின் சமநிலையான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த இரண்டு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டிருந்தது. ஆனால் எந்தப் பிரதேசத்திற்கு என்பதை குறிப்பிடவில்லை. குழுவால் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. பதினைந்து (15) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இட்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட சில தொகுதிகளின் பெயர்கள் பெறப்பட்ட ஒரு பிரேரணைக்கு ஒத்துப்போகிறது.

சுருக்கமாகக் கூறினால் 17 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு -7.0% மற்றும் + 8.4% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து அம்பறை மாவட்டம் 07 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப் பட்டுள்ளது.

அவை தெஹியத்தகண்டிய (41), உஹண (84), கல்முனை (75), சம்மாந்துறை (91), அட்டாளைச்சேனை (74), அம்பாறை (61), பொத்துவில் (77) ஆகிய தேர்தல் தொகுதிகளாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (N4) இல் காட்டப்பட்டுள்ளது.

**சுருக்கமாகக் கூறினால் 17 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், எல்லா இனத்தவர்களின் சமநிலைப்பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து அம்பாறை மாவட்டம் 07 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.**




அம்பாறை மாவட்டம் பிரதேச செயலகங்கள்

### திருகோணமலை மாவட்டம் பற்றிய தகவல்கள்

இம்மாவட்டம் வட அகலாங்கு 8°9' மற்றும் 8°59', கிழக்கு நெட்டாங்கு 80°53' மற்றும் 81°21' இடையில் 2,727 சதுர கிலோமீற்றர் விஸ்தீரணம் கொண்டதாக கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பில் 27.3 சதவீதமான பிரதேசத்தில் பரந்து காணப்படுகிறது. 2,529 சதுர கிலோமீற்றர் தரைப்பிரதேசத்தையும் மற்றும் 198 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர் உள்ளடக்கப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது. அது மாவட்டத்தின் நிலப் பிரதேசத்தில் 7.3 சதவீதமாகும்.

**திருகோணமலை மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பில் 27.3 சதவீதமான பிரதேசத்தில் பரந்து காணப்படுகிறது. 2,529 சதுர கிலோமீற்றர் தரைப்பிரதேசத்தையும் மற்றும் 198 சதுர கிலோமீற்றர் உள்ளக நீர் உள்ளடக்கப்பிரதேசத்தையும் கொண்டுள்ளது.**

அட்டவணை (N4)- அம்பாறை மாவட்ட தேர்தல் தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல் தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தெஹியத்தகண்டிய | 87404 | 122 | 514 | 486 | 88526 |
| உஹண | 69216 | 12189 | 6399 | 18 | 87822 |
| அம்பாறை | 85542 | 246 | 272 | 245 | 86305 |
| பொத்துவில் | 5860 | 54287 | 27230 | 297 | 87674 |
| அட்டாளைச்சேனை | 3589 | 3509 | 91408 | 111 | 98617 |
| சம்மாந்துறை | 422 | 16113 | 83753 | 277 | 100565 |
| கல்முனை | 425 | 26837 | 72126 | 505 | 99893 |
| மொத்தம் | 252458 | 113303 | 281702 | 1939 | 649402 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

# எந்நேரத்திலும் நுரைச்சோலை செயலிழக்கலாம்

(கொழும்பு)

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் எந்த நேரத்திலும் செயலிழக்கும் அபாயத்தில் உள்ளதென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின் நெருக்கடி காரணமாக நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் தொடர்ச்சியாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளமையால் சுமார் 15 அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மின் உற்பத்தி நிலையம் எந்த நேரத்திலும் செயலிழக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

PERSONAL & GROUP CLASSES
2022 BATCH **LOGIC** 5 மாத வகுப்பு
- ஆரம்பத்திலிருந்து முழுமையாக!
- ஆரம்பம் : 25.04.2022
- 2023 BATCH நடைபெறுகிறது!

**S.S. மனோகரன்**
இராஜ வீதி, திருநெல்வேலி, கல்வியங்காடு.
(திருமணப்பதிவாளர் வீட்டிற்கு முன்பாக)
(11084)

**யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரியால் ஆரம்பிக்கப்படவுள்ள சான்றிதழ் கற்கைநெறிகள்**
- அறிவிப்பாளருக்கான கற்கைநெறி (3 மாதம்)
- ஊடகத் தமிழ் கற்கைநெறி (3 மாதம்)

வகுப்புக்கள் அனைத்தும் வார இறுதி நாட்களில் மட்டும் நடைபெறும். 30.04.2022 சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.
ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் எம்முடன் தொடர்புகொள்ளவும்
**Jaffna Film College**
**077 730 4545/ 021 222 4550**
(C-4217)

**முதலாம் ஆண்டு நினைவு நாளும் பிரார்த்தனையும்**



அமரர்
**கார்த்திகேசு பஞ்சரத்தினம் (பஞ்சு)**

எங்கள் அன்புத் தந்தையே ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம், அப்பா நிழல் தந்து எமை வளர்த்து
நிலைத்து மண்ணில் வாழ வைத்து உறுதியுடன் எமைக் காத்த
எங்கள் அன்புத் தெய்வமே உமது பிரிவினால் துடிதுடிக்கின்றோம்.
நீங்கள் மண்ணில் மீண்டும் வந்து பிறவீர்களோ மறுபடியும் எம்மோடு கலந்து
வாழ்வீர்களோ! அப்பா என்று அழைத்த எங்கள் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (23.04.2022) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அப்பாவின் கலட்டித்துறை இமையாணன் உடுப்பிட்டி இல்லத்தில் சமய நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறும். அதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டித்துறை,
இமையாணன், உடுப்பிட்டி. (11127)
அன்புடன்
குடும்பத்தினர்

**வேலைவாய்ப்பு**
வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel and Indian Restaurants இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- வரவேற்பாளர்
- Weighter
- House Keeper

தொடர்பு:-
**076 830 3931**
(11064)

**பெண் உதவியாளர் தேவை**
பிரபல தனியார் புடைவை நிறுவனம் ஒன்றுக்கு பெண் உதவியாளர் தேவை.
(Cargills Square, Jaffna.)
தகைமை : A/L அல்லது O/L, ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.
வேலை நேரம் : 10.00 am to 7.30 pm
Monday - Saturday
தொடர்புகளுக்கு : Miss Thanusa
**077 297 1363**
**021 221 6488**
(11132)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி **A9** வீதியிலிருந்து 2ம் காணி 87 பரப்பு 2½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. (யாழ்.பஸ் நிலையத்திலிருந்து **6 Km** தூரம்)




**ஒரு பரப்பின் விலை**
**5 இலட்சம்**

- 18 அடி பாதையுடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று

தொடர்பு:- **074 291 3725,**
**074 291 3726, 074 291 3727**
(10947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## எரிவாயு...

அங்கீகாரம் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 5,175 ரூபாயாக அதிகரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அரசு அனுமதி வழங்காத நிலையில் குறித்த விலை அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## துப்பாக்கி...

கள் ஆணைக்குழு விசாரணைகளின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சில சிரேஷ்ட அதிகாரிகள் நேற்று முற்பகல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கமைய, மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய குழுவின் முன்னிலையில் குறித்த அதிகாரிகள் நேற்று காலை முன்னிலையாகினர்.

குறித்த விசாரணையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

## கொடிகாமத்தில்...

சிறுவன் உயிரிழந்ததோடு அவனது சகோதரனான தயாபரன் தனுசன் (வயது-15) மற்றும் அவனது தந்தையான நாகமணி தயாபரன் (வயது - 45) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 10.15 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று வெள்ளிக்கிழமை பயணித்த புகையிரதத்துடன், கொடிகாமம் மிருசுவில் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள புகையிரதக் கடவையில் பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் கற்களை கொண்டு ரயில் பாதையை மூடியும் ரயர்களை கொழுத்தியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

குறித்த ரயில் கடவையின் எச்சரிக்கை மின்விளக்குகள் அதிக காலமாக தொழிற்படாமல் இருப்பதோடு இது தொடர்பில் பல தடவைகள் முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் குறித்த ரயில் கடவையில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-30,33,104)

## மகிந்த...

அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பாராளுமன்றில் உள்ள அனைத்து கட்சிகளின் பங்களிப்புடனும் புதிய அமைச்சரவை ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் டலஸ் அழகப்பெரும கடிதத்தின் ஊடாக வலியுறுத்தியுள்ளார். (ம)

## கொலைகார...

மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் 66ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தையொட்டி கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தனக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் துப்பாக்கிமுனையில் அடக்க முயல்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச. ரம்புக்கனை சம்பவத்தின் ஊடாகத் தான் கொலைகாரன் என்பதை ஜனாதிபதி மீண்டும் நிரூபித்துள்ளார்.

"கோ ஹோம் கோட்டா" என்ற கோஷத்துடன் கொழும்பு - காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவாக நாடு முழுவதும் மக்களின் போராட்டங்கள் வலுவடைந்துள்ளன.

இது ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் சர்வதேச அரங்கில் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதைப் பொறுக்க முடியாத கோட்டாபய அரசு, மக்களை வன்முறைக்கு இழுத்து அவர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை துப்பாக்கிமுனையில் அடக்க முயலும்.

எனவே, மக்கள் வன்முறையில் இறங்காமல் அமைதியாக - ஜனநாயக வழியில் தொடர்ந்து போராட வேண்டும். கொலைகாரக் கோட்டாபயவை வீட்டுக்கு விரட்டும் வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும்" என்றார். (ம)

## இலங்கை...

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் பொருளாதார திட்டங்களை முன்கொண்டு சென்று மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கத்திடம் திட்டம் இல்லை என்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள பொதுமக்களுக்கு தற்காலிக வருமானத்தை ஈட்டுவதற்கான திட்டங்கள் குறித்து அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் பசில் ராஜபக்சவின் வரவு-செலவுத்திட்டம் மீளமைப்பு செய்ய வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார். (ம)

## இலங்கையின்...

கும் என சீனப் பிரதமர் லீ கெகியாங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கும் சீனப் பிரதமர் லீ கெகியாங் அவர்களுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடலின்போது சீனப் பிரதமர் இவ்வாறு உறுதியளித்துள்ளார் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## சுகாதாரக்...

றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவமனைகளின் கூட்டமைப்பு இதனை தெரிவித்துள்ளது.

இவ்வாறு பற்றாக்குறையாக காணப்படும் மருந்துப்பொருட்களை தனியார் துறையினர் பெற்றுக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை நிர்வாகம் பொது மக்களிடம் அவசர வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

அந்த வகையில், லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தற்போது 20வகையானமருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், விரும்பிய நன்கொடையாளர்கள் தமக்கு தேவையான மருந்து வகைகளைவழங்கிஉதவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## கொழு...

கின்றனர்.

கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் இளைஞர்கள் மற்றும் பலர் நேற்று 14 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றைய போராட்டக்களத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய பங்கேற்றுள்ளதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக அரசாங்கத்திற்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். (ம)

## இரத்...

குமார திஸாநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி நீர்கொழும்பில் எதிர்ப்பு ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன், ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில், நீர்கொழும்பில் உள்ள லெய்டன் விளையாட்டுத் திடலை வந்தடைந்தது.

நிகழ்வில் பேசிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர், தற்போதைய அரசாங்கம் 2015 இல் இனவாதத்தையும் வெறுப்பையும் பரப்பும் அதே வேளையில், ஏப்ரல் 21 தாக்குதல்கள் அவர்களின் மீதான வெறுப்பின் உச்சக்கட்டமாகும்.

அரசாங்கமும் அதிகாரத்தைப் பெறுவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட தொடர் குண்டுவெடிப்புகளை மேற்கொண்டதாக சுட்டிக்காட்டிய கட்சித் தலைவர், ஏப்ரல் 21 தாக்குதல் ஒரு கொலைச் செயல் என்று குற்றம் சாட்டினார்.

"மக்கள் பதில் சொல்லத் தகுதியானவர்கள், இந்தத் தாக்குதலைத் தடுக்க அரசு தவறியதற்கு யார் பொறுப்பு? இந்த பாவங்கள் அவர்களை தண்டிக்காது போகுமா? பல பிரச்சினைகளுக்கு தெளிவு தேவை என்றார்.

இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை அரசாங்கம் ஏன் வெளிப்படுத்தவில்லை? மற்றும் இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளியை வெளியிடாமல் பொறுப்பை தட்டிக்கழிக்கிறது என்றும் ஜே.வி.பி தலைவர் தெரிவித்தார். (ம)

மெகா பவர்
திகதி 22/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1088
M 10 23 28 43 72

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 049
விருச்சிகம் 11 14 39 44 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 4740
T 1 5 6 6 6 0

தன நிதானய
திகதி - 2022.04.22
சீட்டிழுப்பு இலக்கம் - 770
Z 40 71 74 78

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1543
சீட்டிழுப்பு திகதி: 2022.04.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,475,000/-
16 33 62 65 C

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.22
சீட்டிழுப்பு இல: 3878
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,997,120/-
வெற்றி இலக்கங்கள் 12 18 32 62 V

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1717
சீட்டிழுப்பு திகதி 2022/04/22
தினம் வெள்ளி
K 08 12 56 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 58,092,922/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 161
சீட்டிழுப்பு திகதி 22.04.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 21 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,943,780/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,056,355/-
திகதி 2022-04-22
சீட்டிழுப்பு வாரம் 3429
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 05 20 43 58 கன்னி
7 6 4 6 7 5 0
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,370,560/-

12 கப்பர்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 28 02 33 50 67
சீட்டிழுப்பு வாரம் 893
திகதி 2022.04.22 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 232,103,713/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org